**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**C.C. 168/2023**
**Prosecution Witness : 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ஜலால் முகமத்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. மீரா உசைன்** | **Calling** | : | **சார்பு ஆய்வாளர் (பணி ஓய்வு)** |
| **Village** | : | **சமுத்ராபட்டி, நத்தம்** | **Religion** | : | **முஸ்லீம்** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **63** |
| | | | **Dated** | : | **08.04.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 6 (பட்டியல் சாட்சி 9), **திரு. ஜலால் முகமத்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 2023ம் ஆண்டு திண்டுக்கல் மாவட்டம், ALGS பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 30.05.2022 ம் தேதி 20.00 மணிக்கு தாடிக்கொம்பு காவல் நிலைய உதவி ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது, கோட்டூர், ஆவரம்பட்டியைச் சேர்ந்த கிருஷ்ணன் மகன் கார்திகேயன் என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவைப் பெற்றேன். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் நிலையக் குற்ற

எண். 175/2022, சட்டப்பிரிவு 392 இ.த.சவின் படி வழக்கு பதிவு செய்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கை மேல் விசாரணை செய்வதற்காக ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வழக்கு கோப்பை ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தேதி 29.05.2022 இரவு 09.45 மணி என்றால் சரிதான். புகார் 30.05.2022 இரவு 08.00 மணிக்குதான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி காலதாமத்திற்கான காரணம் முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை 10.06.2022 ம் தேதி தான் நீதிமன்றத்திற்கு அனுப்பட்டுள்ளது. மேற்படி 10 நாட்கள் காலதாமத்திற்கான காரணம் என்ன என்று கேட்டால், நினைவில்லை. புகார்தாரர் மூன்று பவுண் தங்க சங்கிலியை அறுத்துச் சென்றதாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், மேல் அதிகாரியின் உத்தவின் பேரில் முதல் தகவல் அறிக்கை பொய்யாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

**Taken down by me/before me in open court on 08.04.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.04.08 16:09:15 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**